**செய்தி வெளியீடு எண்: 368** **நாள்:02.07.2021**

**<u>செய்தி வெளியீடு</u>**

தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் அனைத்து முதியோர் இல்லங்களும் (கட்டணம்/ கட்டணமில்லா), தனியார் / தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் நடத்திடும் அனைத்து முதியோர் இல்லங்களும், முதியோர்களுக்கான குத்தகை விடுதிகள் மற்றும் வாடகை விடுதிகளும் **2009–ம்** ஆண்டைய தமிழ்நாடு பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நல விதிகளில், விதி பிரிவு **12(3)–ன்** கீழ் **31.07.2021–க்குள்** பதிவு செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது. மேலும், அரசாணை (நிலை) எண்.**83**, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் **23.11.2016–ல்** வெளியிடப்பட்டுள்ள நெறிமுறைகளின்படி இவ்வில்லங்களை பராமரிக்கவும் அறிவுறுத்தப்படுகிறது.

மகளிர் விடுதிகள் நடத்தும் தனியார் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் தங்கள் விடுதிகளை **2014–ம்** ஆண்டைய தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) சட்டத்தின் பிரிவுகள் **3** மற்றும் **4** ஆகியவற்றின் படி விடுதிகள் நடத்துபவர்கள் **31.07.2021–க்குள்** உரிமம் பெற்று கட்டாய பதிவு செய்யப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது. அரசாணை (நிலை) எண்.**31**, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் **26.06.2014** மற்றும் அரசாணை (நிலை) எண். **12**, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் **21.02.2015** ஆகியவற்றில் வெளியிடப்பட்டுள்ள நெறிமுறைகளின்படி இவ்விடுதிகளை பராமரிக்க அறிவுறுத்தப்படுகிறது.

மேற்குறிப்பிட்டுள்ள அறிவுரைகளை பின்பற்றத் தவறுபவர்கள் மீது சட்டப்பூர்வமான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

இந்நேர்வில், மேலும் விவரங்களுக்கு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட சமூக நல அலுவலகத்தினை அணுகலாம் என தெரிவிக்கப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**